கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண். OS. No. 52/2024 நாள்: 17.04.2026

பி.வா.சா.2 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பி.வா.சா – 2 லட்சுமணன் முன்னிலையானார். சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 04.01.2013 ஆம் தேதி நானும் எனது சகோதரரும் வாதியிடம் ரூ.4,50,000/– கடன் பெற்று கொண்டு அந்த கடனுக்காக சொத்தை பொறுத்து ஈடுகடன் பத்திரம் எழுதி கொடுத்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த ஈடுகடனிற்கு 23.10.2013 ஆம் தேதி வரை நானும் எனது சகோதரரும் சேர்ந்து வாதிக்கு வட்டி செலுத்தி விட்டதாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 24.10.2013 ஆம் தேதி மீண்டும் வாதியிடம் 1 லட்ச ரூபாய் கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக மேல் ஈடு கடன் பத்திரம் வாதிக்கு எழுதி கொடுத்ததாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

ரூ.4,50,000/– மும் 1 லட்சத்தையும் என் சகோதரரே வைத்து கொண்டார் என்று நான் சொல்கிறேன். பணத்தை என் சகோதரரிடமே முழுமையாக கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக என் சகோதரரிடம் இருந்து ஏதேனும் எழுதி வாங்கி அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி என் சகோதரருக்கு மட்டும் கடன் கொடுத்திருந்தால் அவரிடம் மட்டுமே எழுதி வாங்கி இருப்பார் என்றும் நானும் சேர்ந்து கடன் பெற்றதால் தான் நானும் என் சகோதரரும் சேர்ந்து

ஈடுகடன் பத்திரம் வாதிக்கு எழுதி கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

அதனால் தான் 23.10.2013 ஆம் தேதி வரை வாதிக்கு நானும் எனது சகோதரரும் சேர்ந்து வட்டி செலுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் வட்டி செலுத்தவில்லை. அதனால் இந்த கடனுக்கு எனக்கும் பங்கு உண்டு என்றும் அந்த கடனை நானும் சேர்ந்து செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிராது சொத்து பூர்வீக சொத்து என்றும் என்னுடைய பங்கு சொத்தை பொறுத்தும் என் சகோதரரின் பங்கு சொத்தை பொறுத்தும் ஈடுகடன் பத்திரத்தில் காட்டி கடன் பெற்றுள்ளோம் என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பங்கு சொத்து ஈடுகடன் பத்திரத்தை பொறுத்து கட்டுப்படுத்தக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2026.04.16 18:18:51 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.